# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 271/மா/2022**

**நாள்: 28.03.2023**

திரு. N.S. மாதேஸ்வரன்,
ஒசூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், ஒசூர் மாநகராட்சி,
ஒசூர் – எதிர்மனுதாரர்

ஒசூர், ஆர்.கே.ரோடு, நியு ஹட்கோ, பிளச்.10, எச்.608 என்ற முகவரியில் வசிக்கும் திரு.N.S.மாதேஸ்வரன் என்பவரின் 24.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2022–ல் பெறப்பட்டு 271/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

ஒசூர், ஆர்.கே.ரோடு, நியு ஹட்கோ, பிளச்.10, எச்.608 என்ற முகவரியில் வசிக்கும் திரு. N.S.மாதேஸ்வரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 24.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

" கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் மாநகராட்சியில் கடந்த 4 ஆண்டுகளாக சுகாதார பணிகளுக்காக Our Land என்ற தனியார் நிறுவனம் மூலமாக தினசரி 520 நபர்கள் துப்புரவு பணிக்காக மாதம் ரூபாய் 99,75,628/– வீதம் நிதி ஒதுக்கப்பட்டு பில்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

520 நபர்களில் 300 பேர் மட்டுமே வருகிறார்கள். அவர்கள் வருகை பதிவேடு பயோமெட்ரிக் முறையில் இல்லாமல், சாதாரணமான முறையில், அவர்களின் முறைகேடுகளுக்கும், லாபத்திற்கும் வசதியாக வருகையை பதிவு செய்து வருகிறார்கள். அதற்கான ஆதாரம் என்னிடம் புகைப்படம் மற்றும் வீடியோ உள்ளது. மேலும், தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய, uniform. Safety equipments, Life insurance, ESI. EPF எதுவும் முறையாக வழங்கப்படவில்லை என தெரிகிறது.

கடந்த 2022 அக்டோபர் மாதம் 21ம் தேதி நடைபெற்ற மாமன்ற சாதாரணக்கூட்டத்தில் பொருள்: 82, (ந.க. எண்.4517/2011/எச் 1) Outsourcing மூலம் துப்புரவு பணிகளை செய்ய 520

நபர்களுக்கு தொகை நிர்ணயம் செய்யவும், இப்பணியினை 01.10.2022 முதல் 31.10.2022 வரை ஒரு மாத காலத்திற்கு மட்டும், ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த விலையிலேயே வழங்க தோராய செலவீனம் ரூ.99,75,628/– .

அதேபோல் பொருள் எண். 83, (ந.க.எண்.4517/2011/எச்1) நாள் 01.11.2022 முதல் 30.11.2022 வரை ஒரு மாத காலத்திற்கு மட்டும் தோராய செலவீனம் ரூ.99,75,628/– என இரண்டு மாதங்களுக்கு செலவீனம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டது. மேற்கண்ட பொருள் எண்.82,83 ஆகியவைகள் எந்த தனியார் பெயரும் இடம் பெறவில்லை. ஏற்கனவே Outsourcing மூலம் செய்த நிறுவனம் பெயரும் இல்லை. இப்படி எந்த தெளிவும், விளக்கமும் இல்லாமல் பல சந்தேகத்திற்கு வழிவகுக்கும் விதமாக இருந்தது. அதுமட்டுமின்றி செலவினத்திற்கு மட்டுமே மாமன்ற அனுமதி கேட்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

எனவே, ஒசூர் மாநகராட்சி சுகாதார துறையில் பல முறைகேடுகள் நடப்பதாக தெரிகிறது. ஒசூர் மாநகராட்சி பொது சுகாதார கமிட்டி தலைவராக உள்ள நான் பலமுறை மாமன்றத்திலும், ஆணையாளர் அவர்களிடத்திலும் டெண்டர் முறைகேடுகள் பற்றி எடுத்துரைத்தும், எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. எனவே, எனது எதிர்ப்பை எழுத்து மூலமாக கடந்த மாமன்ற கூட்டத்தில் (2022 அக்டோபர் 21 ஆம் தேதி) தெரிவித்துள்ளேன். எனவே, மேற்கண்ட பொருள் 82, 83 மற்றும் Our Land நிறுவனத்தின் முறைகேடுகள் பற்றி தக்க விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 11.01.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஒசூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

ஒசூர் மாநகராட்சி ஆணையர் தனது 02.02.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்:

" ஒசூர் மாநகராட்சியில் பொது சுகாதார பணிக்காக 520 நபர்கள் வெளி முகவர்கள் மூலம் பணியமர்த்தப்பட்டு சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணி Ourland Engineering Works Private Limited, Chennai அவர்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

மேற்படி பணியாளர்களுக்கு வருகைப்பதிவேடு அனைத்து மண்டலங்களிலும் அந்தந்த துப்புரவு ஆய்வாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதில்முறைகேடு ஏதும் நடைபெறவில்லை.

மேற்படி பணியாளர்களுக்கு சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், ஆயுள் காப்பீடு ESI. EPF ஆகியவை முறையாக வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன் அதற்கான ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் மாமன்றத்தில் பொருள் வைக்கப்பட்டு மாமன்றத்தின் அனுமதி பெற்ற பிறகே ஒப்பந்ததாரர்களுக்கு தொகை கோடிட்ட காசோலை மூலமே வழங்கப்படுகிறது. இதில் எவ்வித முறைகேடும் நிகழவில்லை.

29.12.2022 அன்று நடந்த மாமன்ற கூட்டத்தில் பொது சுகாதாரக்குழு தலைவர் அவர்கள் தெரிவித்த எதிர்ப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. இந்த ஒரு உறுப்பினரைத்தவிர மற்றவர்கள் யாரும் எதிர்ப்புத்தெரிவிக்கவில்லை எனவே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 23.02.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4)உடல்நலக்குறைவு ஏற்பட்ட காரணத்தினால் 13.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராக இயலவில்லை என மின்னஞ்சலில் தெரிவித்து பிறிதொரு நாளில் விசாரணைக்கு தேதி வழங்குமாறு மனுதாரர் கோரிக்கை விடுத்தார்.

5) ஒசூர் மாநகராட்சி துப்புரவு ஆய்வாளர் 13.03.2023 அன்றைய தேதியில் நேரடியாக விசாரணையில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" ஒசூர் மாநகராட்சியில் பொது சுகாதாரப் பணிக்காக 520 நபர்கள் Outsourcing மூலம் பணியமர்த்தப்பட்டு சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியாளர்களின் வருகைப்பதிவேடு பயோமெட்ரிக் மூலம் மேற்கொள்ள 6 பகுதிகளில், 6 பயோமெட்ரிக் இயந்திரங்கள் இருந்துவந்த நிலையில், மேற்கண்ட பயோமெட்ரிக் இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதால், பயோமெட்ரிக் மூலம் மேற்கண்ட சுகாதாரப்பணியாளர்களின் தினசரி வருகையை பதிவு செய்ய இயலவில்லை என்பதையும், மேற்கண்ட இயந்திரங்கள் விரைவில் பழுதுநீக்கம் செய்யப்பட்டு, பயோமெட்ரிக் மூலம் பணியாளர்களின் வருகையை பதிவு செய்யப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட பணியாளர்கள் பணிக்கு வராத நாட்களுக்கு, அவர்களின் ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது என்பதையும், மேற்கண்ட பணியாளர்களுக்கு வருடத்திற்கு 2 செட் சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும், ESI மற்றும் EPF ஆகியவை முறையாக வழங்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட பணியாளர்களின் சம்பள விவரங்கள் மற்றும் அப்பணியாளர்களின் தினசரி வருகை குறித்த விவரங்களை இம்முறைமன்றத்தில் ஒரு வார காலத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரர் 13.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் உடல்நலக்குறைவின் காரணமாக ஆஜராக இயலாதநிலையில் அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக மனுதாரரை 20.03.2023 அன்றைய நேரடி விசாரணைக்கு வருமாறு இம்முறைமன்ற 14.03.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் 20.03.2023 அன்றைய நேரடி விசாரணையிலும் மனுதாரர் ஆஜராகவில்லை என்பதை இம்முறைமன்றம் பதிவு செய்கிறது.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் ஒசூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஒசூர் மாநகராட்சி துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

ஒசூர் மாநகராட்சி பொது சுகாதார தலைவராகவும் 22வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு N.S.மாதேஸ்வரன் ஒசூர் மாநகராட்சியில் சுகாதார பணிகளுக்காக 'our land' என்ற தனியார் நிறுவனம் மூலம் 4 ஆண்டுகளாக தினசரி 520 நபர்கள் துப்புரவுப் பணிக்காக மாதம் ரூ.99,75,628/- வீதம் நிதி ஒதுக்கி பில் தொகை வழங்கப்பட்டு வருவதாகவும், ஆனால் மேற்கண்ட 520 நபர்களில் 300 பேர் மட்டும் வருவதாகவும், அவர்களின் வருகைப்பதிவேடு பயோ மெட்ரிக் முறையில் இல்லாமல் சாதாரணமான முறையில் மாநகராட்சி அலுவலர்கள் தங்களது லாபத்திற்காக முறைகேடு செய்திட ஊழியர்களின் வருகையை பதிவு செய்து வருகிறார்கள் எனவும் இந்த தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கவேண்டிய uniform, ESI, EPF, Etc. முறையாக வழங்கிடவில்லை என்றும் டெண்டர் முறைகேடுகள் குறித்து நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

ஒசூர் மாநகராட்சி பொது சுகாதார பணிக்காக 520 நபர்கள் வெளிமுகவர்கள் மூலம் பணியமர்த்தப்பட்டு பணி மேற்கொள்ளப்படுகிறது எனவும் வருகைப்பதிவேடு முறையாக பராமரிக்கப்படுகிறது என்றும் uniform, ESI. EPF etc, முறையாக வழங்கப்படுகின்றன என்றும் மேலும் மன்றத்தின் முன் அனுமதி பெற்ற பிறகே ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்கப்படுவதாகவும், 29.12.2022அன்று நடந்த மாமன்ற கூட்டத்தில் பொது சுகாதாரக்குழு தலைவர் அவர்கள் தெரிவித்த எதிர்ப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது எனவும் இந்த ஒரு உறுப்பினரைத்தவிர மற்றவர்கள் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் ஆணையரின் அறிக்கை மற்றும் ஒசூர் மாநகராட்சி துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions, namely –

7 ( c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:

மனுதாரர் ஒசூர் மாநகராட்சியில் பொது சுகாதாரப்பணியினை செய்யும் 520 நபர்களில் 300 பேர் மட்டுமே வருவதாகவும் அவர்களின் வருகை பதிவேடு பயோமெட்ரிக் முறையில் இல்லாமல் சாதாரணமான முறையில் வருகை பதிவு செய்து வருவதாக தெரிவித்துள்ள நிலையில் மாநகராட்சி துப்புரவு ஆய்வாளரின் வாக்குமூலத்தில் மேற்கண்ட பணியாளர்களின் வருகைப்பதிவேடு பயோமெட்ரிக் மூலம் மேற்சொன்ன 6 பகுதிகளில் 6 பயோ மெட்ரிக் இயந்திரங்கள் இருந்துவந்த நிலையில் அந்த பயோமெட்ரிக் இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதால் பயோமெட்ரிக் மூலம் மெற்கொண்ட சுகாதாரப்பணியாளர்களின் தினசரி வருகையை பதிவு செய்ய இயலவில்லை எனவும் அவைகள் விரைவில் பழுதுநீக்கம் செய்யப்பட்டு பயோமெட்ரிக் மூலம் வருகை பதிவு செய்யப்படும் என தெரிவித்து மேற்கண்ட பணியாளர்கள் பணிக்கு வராத நாட்களுக்கு அவர்களின் ஊதியம் பிடித்தம் செய்யப்படுவதாகவும் வருடத்திற்கு 2 செட் சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுவதாகவும் E.S.I. மற்றும் E.P.F. ஆகியவை முறையாக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் ஆணையரின் அறிக்கையில் பயோமெட்ரிக் இயந்திரங்கள் குறித்து எந்த ஒரு தகவலும் கொடுக்கப்படவில்லை. மொத்தமுள்ள ஆறு பயோமெட்ரிக் இயந்திரங்களும் ஒரே காலகட்டத்தில் பழுதடைய வாய்ப்பில்லை. அந்த இயந்திரங்கள் சரிவர இயங்குகின்றனவா என்பதை சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் கண்காணித்து வந்து இருக்க வேண்டும். இதிலிருந்து அவர்கள் தங்கள் கடமையை சரிவர செய்யவில்லை என்பது தெள்ளத்தெளிவாக தெரிகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

மேலும் மனுதாரர் ஒசூர் மாநகராட்சியில் பொது சுகாதார தலைவர் என்ற பொறுப்பான பதவியில் இருக்கும் நிலையில் நேரிடையாக ஆஜராகாதது வருத்தமளிக்கிறது. இனி வரும்காலங்களில் தம்மால் அளிக்கப்படும் புகார் மனு குறித்து மேற்கொள்ளப்படும் நேரடி விசாரணையில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். எனவே இந்நேர்வு தொடர்பாக கீழ்க்கண்ட நடவடிக்கையினை தொடர்ந்திட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

(i) ஒசூர் மாநகராட்சியில் உள்ள 6 பயோமெட்ரிக் இயந்திரங்களை சரிவர பராமரிக்காமல் சுகாதார பணியாளர்களின் வருகையை முறையாக பதிவு செய்ய உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுக்காமல் தங்களது கடமையிலிருந்து தவறிய சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும்

(ii) அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கும் சுகாதாரப்பணியாளர்களின் வருகையினை முறையாக பதிவு செய்திட பயோமெட்ரிக் முறையை பயன்படுத்திட வேண்டும் என்பதை வலியுறுத்தி ஒரு சுற்றறிக்கையினை அனுப்பவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Forum takes exception to the statement of the Respondent Sanitary Officer of the Corporation that all the 6 bio-metric machines are under disrepair and hence manual attendance. This is a cock and bull story that the Forum would hardly accept and pass over. This is a deliberate design of the officials concerned to avoid bio-metric attendance and continue with the manual signing framed to grind their axes of aggrandizement and obvious abuse of powers. The DMA is directed to launch disciplinary action against the Commissioner and other officials concerned with the system of administration of bio-metric attendance. Unless this is complied with there is no use of providing bio-metric machines. Valuable money of the local body is swindled by the officials concerned along with the outsourcing agency that are in criminal symbiosis. The Government in MAWS is being addressed on this serious malpractice perpetuated in many Urban Local Bodies.

This unholy nexus between the Local Body and outsourcing agency by indulging in false and fake attendance in order to share the spoils of the fictitious salaries should be broken once and for all. Though it is said that the amounts are credited into the accounts of the workers it is just common sense to see how the loot is availed of between the unscrupulous Local Body employees and the outsourcing agency. A dead end stop should be made.

2023-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) Thiru N.S.Madeshwaran,
Chairman,
Public Health,
Hosur City Municipal Corporation,
H 608, Ph 10, New Hudco.
R.K. Road,Hosur – 635 109.

2) அரசு கூடுதல் தலைமைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச்செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 600 009.

3) ஆணையர்,
ஒசூர் மாநகராட்சி,
ஒசூர்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக